செ.வெ.எண்: 07/பிப்ரவரி நாள்: 04.02.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**முன்னாள் படைவீரர்கள் / விதவையர்கள் ஆதார் அட்டை விவரங்களை ஆவணக்காப்பகத்திற்கு தெரிவிக்க வேண்டும்**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

படைப்பணி ஆவணங்களில் முன்னாள் படைவீரர்கள் / விதவையர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் ஆதார் எண் விவரங்களை பதிவு செய்வதற்கு ஏதுவாக, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவையர்கள் தங்களது மற்றும் தங்களது அனைத்து குடும்ப உறுப்பினர்களின் பெயர், உறவுமுறை மற்றும் ஆதார் அட்டை எண்கள் போன்ற விவரங்களை அவர்கள் பணிபுரிந்த ஆவணக்காப்பகத்திற்கு அனுப்பி வைக்குமாறும், ஆவணக்காப்பகத்திற்கு அனுப்பிய கடிதத்தின் நகலினை இராமநாதபுரம் மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**